Puducherry /Tamil 18.10/ 31.12.2024

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

நாள் : 31.10.2024 செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான கனவை நனவாக்க வரும் 2025ஆம் ஆண்டில் கடினமாக பணியாற்ற தீர்மானித்துள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வரும் ஆண்டில் ககன்யான் திட்டத்தின் கீழ், பெண் ரோபோவை விண்வெளிக்கு அனுப்ப இந்தியா தயாராக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இந்தோ – பசிபிக் பகுதியில் ஸ்திரத்தன்மை, முன்னேற்றம், மற்றும் செழுமைக்கு குவாட் அமைப்பு ஒரு முக்கிய சக்தியாக விளங்குகிறது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் ஆங்கிலப் புத்தாண்டு நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, மக்களுக்கு துணைநிலை ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் (6)

2025ஆம் ஆண்டில் கடினமாக பணியாற்றவும், வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான கனவை நனவாக்கவும், மத்திய அரசு தீர்மானித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது எக்ஸ் தளத்தில் மை கவ் இந்தியா வெளியிட்ட காணொளி பதவிற்கு பதிலளித்துப் பேசிய அவர், 24ஆம் ஆண்டில் பல சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. அவை இந்த காணொளியில் அற்புதமாக தொகுத்து தரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இஸ்ரோ -1 (17)

விண்வெளியில் இரண்டு செயற்கைக் கோள்களை ஒன்றிணைக்கும் புதிய முயற்சியாக இந்திய விண்வெளி ஆய்வுக் கழகமான இஸ்ரோ PSLV-C60 ராக்கெட்டை வெற்றிகரமாக நேற்றிரவு விண்ணில் செலுத்தியது. விண்வெளியிலேயே 2 செயற்கைக் கோள்களை இணைக்கும் இந்த ஸ்பேடெக்ஸ் திட்டத்தை இஸ்ரோ அமைத்துள்ளது. இதனை செயல்படுத்துவதற்காக PSLV-C60 ராக்கெட்டை, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து நேற்றிரவு 10.15 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. PSLV-C60 ராக்கெட் மூலம் SDX01 மற்றும் SDX02 என பெயரிடப்பட்டுள்ள இரண்டு செயற்கைக் கோள்கள் புவிவட்ட சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தப் பட்டுள்ளன.

இதனிடையே, செய்தியாளர்களிடம் பேசிய இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு. சோம்நாத் எதிர்பார்த்தபடி PSLV-C60 ராக்கெட் விண்ணில் பாய்ந்து விண்கலன்களை துல்லியமாக நிலைநிறுத்தி உள்ளதாக தெரிவித்தார். இந்த 2 விண்கலன்களின் சேவையை படிப்படியாக அதிகரித்து அதன்பின்னர் அதை அருகருகே கொண்டு சென்று ஒருங்கிணைக்கும் பணி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். உத்தேசமாக இந்தப் பணி ஜனவரி 7ஆம் தேதி நடைபெறும் என்றும், அன்றைய தினம் விண்கலன்கள் ஒருங்கிணைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரோ -2 (8)

PSLV-C60 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. 2035ஆம் ஆண்டு விண்வெளியில் ஆய்வு மையம் அமைப்பது முக்கியமான திட்டமாகும். மேலும் ககன்யான் திட்டத்திற்கு இந்த இரண்டு விண்கலன்களை ஒன்றிணைக்கும் ஆய்வுப் பணி மற்றும் சோதனை முக்கியமானதாக கருதப்படுகிறது. இதுபோன்ற திட்டங்களை இதற்கு முன்பு அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் வெற்றிகரமாக சோதனை நடத்தி முடித்து இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது இந்தியாவின் சார்பில் இந்த சோதனை வெற்றி அடைந்ததன் மூலம் 4ஆவது நாடாக இந்தியா விளங்குகிறது.

## ஜிதேந்திர சிங் (15)

PSLV-C60 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு மத்திய விண்வெளித்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் பாராட்டுத் தெரிவித்துள்ளார். இந்த சாதனை புரிந்த உலகின் 4ஆவது நாடாக இந்தியா திகழ்வதாக அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார். இஸ்ரோ விஞ்ஞானிகளின் இந்த சாதனைகளின்போது விண்வெளித் துறையினருடன் இணைந்து செயல்படுவது தமக்கு பெருமை அளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். விண்வெளியில் இந்தியா ஆய்வு மையம் அமைப்பதற்கு இந்த வெற்றி உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 2024ஆம் ஆண்டு, இந்திய விண்வெளித் துறைக்கு முக்கியமான ஆண்டாகும் என்றும் அவர் தெரிவித்தார். பிரதமர் திரு. நரேந்திர மோடி அரசின் கீழ், விண்வெளித்துறை பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ககன்யான் திட்ட சோதனைகள் நடைபெற்று வருவதாகவும், சோதனைகள் தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாகவும், பெண் ரோபோவுடன் ஒத்திகை அடுத்த ஆண்டு நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் ஆலோசனை கூட்டம் (5)

2025-26ஆம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் இடம் பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து ஆலோசிப்பதற்கான கூட்டம் நேற்று புதுடெல்லியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையேற்றார். கூட்டத்தில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த செயலர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

வயநாடு (9)

வயநாடு நிலச்சரிவை அதி-தீவிர பேரிடராக மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக கேரள அரசுக்கு மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளது. கேரளாவின் வயநாடு பகுதியில் கடந்த ஜூலை 30ஆம் தேதி பெய்த கனமழை காரணமாக திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனால் வயநாட்டின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டன. அந்த பகுதிகளில் இருந்து 100க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் மண்ணுக்குள் புதைந்தன. வயநாடு நிலச்சரிவை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டுமென கேரள அரசு வலியுறுத்தி வந்த நிலையில், மத்திய அரசு அதி-தீவிர பேரிடாக அறிவித்துள்ளது.

**ராபி பருவம் (11)**

நாட்டில் ராபி பருவத்தில் பயிரிடப்படும் பயிர்களின் பரப்பளவு அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. பயிர் விதைப்பு, பயிர் விதைப்பின் பரப்பளவு 614 லட்சம் ஹெக்டராக உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில், 313 லட்சம் ஹெக்டர் பரப்பளவில் கோதுமை சாகுபடி செய்யப்பட்டு இருந்த நிலையில், தற்போது 319 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கோதுமை சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. ராபி பயிர் சாகுபடி செய்யப்பட்ட பகுதிகள் குறித்த முன்னேற்ற அறிக்கையை வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை வெளியிட்டுள்ளது. இதில் பருப்பு வகைகள் 136 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

**ஜெய்சங்கர் (13)**

இந்தோ – பசிபிக் பகுதியில் ஸ்திரத்தன்மை, முன்னேற்றம், மற்றும் செழுமைக்கு குவாட் அமைப்பு ஒரு முக்கிய சக்தியாக விளங்குகிறது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது ஊடகப்பதிவில் விடுத்துள்ள செய்தியில், ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய குவாட் உறுப்பு நாடுகள் பருவநிலை மாற்றம், புற்றுநோய் மற்றும் தொற்று நோய்களை எதிர்த்துப் போராட முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார். மேலும், தரமான

உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகள், இணைய பாதுகாப்பு போன்ற சிக்கலான சவால்களை இக்கூட்டமைப்பு எதிர்த்து போராடி வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். குவாட் அமைப்பின் 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி, அமைப்பில் உள்ள நாடுகள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில், இந்தோ – பசிபிக் முழுவதும் தற்போது இணைந்து செயல்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இந்தியா – நேபாளம் (8)

இந்திய – நேபாள ராணுவ கூட்டுப் பயிற்சி இன்று தொடங்கியது. இது தொடர்பாக மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சூரிய கிரண் என பெயரிடப்பட்டுள்ள இந்த கூட்டு ராணுவ பயிற்சியின் 18ஆவது நிகழ்வில் பங்கேற்பதற்காக, 334 வீரர்களை கொண்ட இந்திய ராணுவ குழு நேபாளம் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி நேபாளத்தில் இன்று முதல் ஜனவரி 13ஆம் தேதி வரை நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி இரு நாடுகளிலும், மாறி மாறி நடத்தப்படும் வருடாந்திர பயிற்சி முகாம் ஆகும்.

CBDT (5)

மத்திய நேரடி வரிகள் வாரியம், விவாட் சே விஸ்வாஸ் திட்டத்தின் காலக்கெடுவை இன்று முதல் ஜனவரி 31ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.

இத்திட்டம் வரி செலுத்துவோர் சர்ச்சைக்குரிய தொகையை குறிப்பிட்ட சதவிகிதத்துடன் செலுத்துவதன் மூலம் அவர்களின் நிலுவையில் உள்ள வரிகளை தீர்க்க இத்திட்டம் உதவுகிறது.

புத்தாண்டு (19)

உலகம் முழுவதும் உள்ள மக்கள் 2024ஆம் ஆண்டிற்கு விடைகொடுத்து, 2025ஆம் ஆண்டை வரவேற்க தயாராகி வருகின்றனர். புத்தாண்டை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்க அனைவரும் தயாராகி வரும் நிலையில், மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை அரசியல் கட்சித் தலைவர்களும் தெரிவித்த வண்ணம் உள்ளனர். இந்நிலையில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம், திரு. சாய் சரவணன் குமார், திரு. திருமுருகன் உள்ளிட்டோரும் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். இதனிடையே பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் புத்தாண்டை கொண்டாட புதுச்சேரியில் காவல்துறையினரின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பொதுமக்கள் அதிகம் கூடும் கடற்கரை சாலை, கோவில்களில் அதிக பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கு, போக்குவரத்து என 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இது குறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்...

(வாய்ஸ்)

புதுச்சேரி நடனம் (10)

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற தேசிய அளவிலான பால் ரங் என்ற நாட்டுப்புற நடன போட்டியில், புதுச்சேரியை சேர்ந்த மாணவ – மாணவிகள் முதல் பரிசை பெற்றுள்ளனர். இம்மாதம் 21, 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இப்போட்டியில் புதுச்சேரி முதலியார்பேட்டை அன்னை சிவகாமி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இருந்து 2 மாணவிகளும், கதிர்காமம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இருந்து 3 மாணவிகளும், பிரசிடென்சி மேல்நிலைப் பள்ளியில் இருந்து ஒரு மாணவியும், 3 மாணவர்களும் என மொத்தம் 15 பேர் கொண்ட குழு 5 ஆசிரியர்கள் தலைமையில் கலந்து கொண்டனர். இது குறித்து இக்குழுவின் ஒருங்கிணைப்பாளரும், நுண்கலை ஆசிரியருமான திரு. பாபு கூறுகையில்...

(வாய்ஸ்)

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான கனவை நனவாக்க வரும் 2025ஆம் ஆண்டில் கடினமாக பணியாற்ற தீர்மானித்துள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வரும் ஆண்டில் ககன்யான் திட்டத்தின் கீழ், பெண் ரோபோவை விண்வெளிக்கு அனுப்ப இந்தியா தயாராக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இந்தோ – பசிபிக் பகுதியில் ஸ்திரத்தன்மை, முன்னேற்றம், மற்றும் செழுமைக்கு குவாட் அமைப்பு ஒரு முக்கிய சக்தியாக விளங்குகிறது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் ஆங்கிலப் புத்தாண்டு நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, மக்களுக்கு துணைநிலை ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**

**எமது அடுத்த செய்திச் சுருக்கம் இரவு 7.00 மணிக்கு. RM / NV / RK**